உங்கள் அபிமான தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்! கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 10.07.2026 • மலர் 04 • இதழ்: 191 • வெள்ளிக்கிழமை • Edition : Nagercoil • 10.07.2026 • Vol : 04 • Issue : 191 • Page : 4 • Rs. 5/-

# இந்தியாவில் விரைவில் 6ஜி சேவை

## பிரதமர் மோடி பேச்சு

மெல்போர்ன், ஜூலை 10

ஆஸ்திரேலியா சென்றுள்ள இந்திய பிரதமர் மோடி, மார்வெல் மைதானத்தில் நடைபெறும் அரசு நிகழ்ச்சியில் கலந்துகொண்டுள்ள நிலையில் 'வணக்கம் மெல்போர்ன்' என தமிழில் கூறி தனது உரையை தொடங்கினார்.




சிவகங்கை மாவட்டம், காளையார் கோவில் வட்டம், நாட்டரசன் கோட்டை உள்வட்டத்திற்குட்பட்ட, கொல்லங்குடி கிராமத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ப.ஆகாஷ், இ.ஆ.ப., அவர்கள், இன்று (08.07.2026) வேளாண்மைத்துறையின் சார்பில், பயனாளிகளுக்கு வேளாண் இடுபொருட்களை வழங்கினார்.

பிரதமர் மோடி அரசு முறை பயணமாக இந்தோனேஷியா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். முதற்கட்டமாக இந்தோனேசியா பயணத்தை நிறைவு செய்த அவர், அடுத்த கட்டமாக ஆஸ்திரேலியா சென்றடைந்தார். அப்போது மெல்போர்ன் விமான நிலையத்தில் பிரதமர் மோடிக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

ஆஸ்திரேலிய பிரதமர் அந்தோணி அல்பானீசை பிரதமர் மோடி சந்தித்தார். அப்போது, இந்தியாவின் அணுசக்தி திட்டங்களுக்கு உதவும் வகையில் இந்தியாவுக்கு யுரேனியம் வழங்க ஆஸ்திரேலியா ஒப்புக்கொண்டுள்ளது. மேலும், இந்தியாவின் வரலாற்றுச் சிறப்புமிக்க 'ககன்யான்' விண்வெளித் திட்டத்தில் இணைவதாக ஆஸ்திரேலிய பிரதமர் அறிவித்துள்ளார். இந்த திட்டத்திற்கு ஆதரவாக, கோகோஸ் தீவுகளில் தற்காலிக விண்வெளி கண்காணிப்பு நிலையத்தை அமைக்கவும் ஆஸ்திரேலியா ஒப்புக்கொண்டுள்ளது. மேலும், அணுசக்தி, கடல்பாதுகாப்பு போன்ற முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன.

முன்னதாக இந்திய வம்சாவளியினர் நிகழ்ச்சியில் பிரதமர் மோடி ஆஸி. பிரதமர் இணைந்து பங்கேற்றனர். ஆஸ்திரேலியா, மெல்போர்ன் மார்வெல் மைதானத்தில் பிரதமர் மோடிக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.



ஆஸி.,யில் இந்திய சமூகத்தினர் பங்கேற்ற நிகழ்ச்சியில் உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி,

"வணக்கம் மெல்போர்ன்! வீட்டில் இருக்கும் பால் ஆஸ்திரேலியப்பாலாக இருக்கலாம், ஆனால் அதில் போடப்படும் டீ இந்தியத் தேநீர். பருப்பும் காய்கறிகளும் ஆஸ்திரேலியாவினுடையதாக இருக்கலாம், ஆனால் அவை அசல் இந்திய மசாலாப் பொருட்களால் தாளிக்கப்படுகின்றன.

இந்தியா உதவிக் கரம் நீட்டும்போது, பாஸ்போர்ட்களைப் பார்ப்பதில்லை. இந்தியா உதவிப் பொருட்களை அனுப்பும்போது, பாஸ்போர்ட்டின் நிறத்தையும் பார்ப்பதில்லை. அதனால்தான் உலகம் இந்தியாவின் மீது இவ்வளவு பெரிய நம்பிக்கையை வைத்துள்ளது.

கடந்த 12 ஆண்டுகளில் 3வது முறையாக ஆஸ்திரேலியாவுக்கு வருகிறேன். இந்தியா ஆஸி. இடையேயான கிரிக்கெட் உறவு உணர்ச்சி பூர்வமானது

இந்தியா தனது 'ககன்யான்' விண்கலத்தை விண்வெளிக்கு அனுப்பத் தயாராகி வருகிறது. மேலும் தனது சொந்த விண்வெளி நிலையத்தைநிறுவும்இலக்கை நோக்கியும் செயல்பட்டு வருகிறது.

6ஜி தொழில்நுட்பம் விரைவில் இந்தியாவில் வரப்போகிறது.

ஆயிரக்கணக்கான இந்திய மாணவர்கள் ஆஸ்திரேலியாவில் படித்து வருகின்றனர். தற்போது ஆஸ்திரேலியப் பல்கலைக்கழகங்கள் இந்தியாவில் தங்கள் வளாகங்களைத் திறந்து வருகின்றன. டீக்கின் மற்றும் வொல்லோங்காங் பல்கலைக்கழகங்கள் ஏற்கனவே வளாகங்களைத் தொடங்கி விட்டன. மேலும் பல ஆஸ்திரேலியப் பல்கலைக்கழகங்கள் இந்தத் திசையில் முன்னேறி வருகின்றன

இவ்வாறு அவர் கூறினார்.

ஆஸ்திரேலிய பிரதமருக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் செல்போன் டார்ச்களை ஒளிர விடுமாறு கோரிக்கை விடுத்த பிரதமர் மோடி. உடனே அனைவரும் தங்களது மொபைல் டார்ச்களை ஒளிர விட்டனர்

இதனை உணர்ச்சிப் பெருக்குடன் ஆஸ்திரேலிய பிரதமர் அந்தோனி அல்பானீஸ் ஏற்றுக் கொண்டார்.

## கோவை மாவட்ட ஸ்டுடியோ ஓனர்ஸ் அசோசியேஷன்–2012 சார்பில் செய்தியாளர் சந்திப்பு



கோவை ஜூலை:10

கோவை மாவட்ட ஸ்டுடியோ ஓனர்ஸ் அசோசியேஷன்–2012 சார்பில் இன்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில், புகைப்படத் தொழில் எதிர்கொண்டு வரும் பொருளாதார நெருக்கடி காரணமாக சேவைக் கட்டணங்கள் மறுஆய்வு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

சங்க நிர்வாகிகள் கூறுகையில், கடந்த சில ஆண்டுகளில் கேமரா, லென்ஸ், கணினி, ஹார்ட்டிஸ்க், SSD, மெமரி கார்டு, ஆல்பம், பிரிண்டிங் பொருட்கள், பிரேம்கள், மின்சாரம், இணைய வசதி, வாடகை, ஊழியர் ஊதியம் உள்ளிட்ட தொழில்சார் செலவுகள் தொடர்ந்து அதிகரித்துள்ளன.

மேலும் Adobe Creative Cloud, செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படையிலான மென்பொருட்கள், Cloud Storage உள்ளிட்ட டிஜிட்டல் சேவைகளுக்கான சந்தா கட்டணங்களும் செயல்பாட்டு செலவுகளை கணிசமாக உயர்த்தியுள்ளதாக தெரிவித்தனர். இந்தச் செலவின உயர்வால் பல சிறிய மற்றும் நடுத்தர அளவிலான ஸ்டுடியோக்கள் தொழிலைத் தொடர்ந்து நடத்த முடியாமல் கடைகளை மூடி, மாற்றுத் தொழில்களுக்கு செல்லும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும், இது ஆயிரக்கணக்கான குடும்பங்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கும் பிரச்சினையாக மாறியுள்ளதாகவும் அவர்கள் கூறினர்.

அண்டை மாநிலமான கேரளாவில் எட்டு பிரதிகள் கொண்ட பாஸ்போர்ட் அளவு புகைப்படத்திற்கான கட்டணம் ₹350 வரை நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில், கோவையில் நீண்ட காலமாக சுமார் ₹180க்கு வழங்கப்பட்டு வந்த சேவையை தற்போதைய சூழலை கருத்தில் கொண்டு ₹200 ஆக மட்டுமே உயர்த்தியுள்ளதாக சங்கம் தெரிவித்தது. இந்தக் கட்டண உயர்வு அதிக லாபம் நோக்கியதல்ல; தரமான சேவையை தொடர்ந்து வழங்குவதற்கான குறைந்தபட்ச அவசியம் எனவும் விளக்கமளித்தனர்.

புகைப்பட ஸ்டுடியோக்கள் குடும்ப நினைவுகள், திருமணங்கள், கல்வி, வேலைவாய்ப்பு, அரசு ஆவணங்கள் உள்ளிட்ட முக்கிய தருணங்களை பதிவு செய்து பாதுகாக்கும் நம்பகமான சேவை மையங்களாக இருப்பதால், பொதுமக்கள் தங்களது பகுதியிலுள்ள பதிவு செய்யப்பட்ட உள்ளூர் ஸ்டுடியோக்களுக்கு தொடர்ந்து ஆதரவு வழங்க வேண்டும் என்றும் சங்கம் வேண்டுகோள் விடுத்தது. மேலும், சேவைக் கட்டண மறு ஆய்வு அட்டவணை அனைத்து உறுப்பினர்களுக்கும் வழங்கப்படவுள்ளதாகவும், அதை ஒருமித்த முறையில் நடைமுறைப்படுத்துமாறும் சங்கம் கேட்டுக் கொண்டது. புகைப்படத் தொழிலின் தரம், நம்பகத் தன்மை மற்றும் நீடித்த வளர்ச்சியை உறுதி செய்வதற்காக தொடர்ந்து செயல்படுவோம் என்றும் சங்க நிர்வாகிகள் தெரிவித்தனர்.

தின தமிழ்
நிருபர்கள் தேவை
வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக
தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை
தகுதிகள்
குற்றவழக்குகள் இருக்கக் கூடாது. முன் அனுபவம். பட்டதாரி. தமிழில் உரையாடுதல். தமிழில் பிழையின்றி எழுதுதல். தகவல் பரிமாற்றத் திறன்
மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்
99944 66200 – 70102 64701

## தஞ்சாவூர் மாநகரில்

## போக்குவரத்து நெரிசலை குறைக்க ஒரு வழி பாதை, வாகன நிறுத்துமிடம் அமைப்பது குறித்து கலெக்டர் ஆய்வு



தஞ்சாவூர் ஜூலை 10

தஞ்சாவூர் மாநகரில் போக்கு வரத்து நெரிசலை குறைக்க ஒரு வழி பாதை,வாகனம் நிறுத்துமிடம் குறித்து கலெக்டர் ரேவதி ஆய்வு செய்தார்

மாமன்னன் ராஜராஜ சோழனால் கட்டப்பட்ட தஞ்சாவூர் பெரிய கோவி லுக்கு உள்ளூர், வெளியூர் மட்டுமி ன்றி வெளி மாவட்டங்களில் இருந்தும், வெளி மாநிலங்களில் இருந்தும் ஏராளமானோர் வந்து செல்கின்றனர். சனி ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களில் பக்தர்கள் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை வழக்கமான நாட் களை விட பல மடங்கு அதிகரித்து வருகிறது. இவர்கள் கார் ,வேன்கள்பஸ்களில்வருவதால்பெரியகோவிலுக்கு எதிரே உள்ள வாகன ம் நிறுத்துமிடம் நிரம்பி விடுவதால்பழைய கோர்ட் சாலை, மருத்துக்கல்லூரி சாலை, சீனிவாசபுரம், இராச மிராசுதார்அரசு மருத்துவ மனை சாலையோரங்களில் கார்கள், வேன்கள், பஸ்கள் நிறுத்தப்படுகின்றன

மேலும் தஞ்சாவூர் பெரிய கோவி ல் சாலையில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. அப்படி நெரிசல் ஏற்படும்போது பஸ்கள் பழைய கோர்ட்டு சாலை வழியாக திருப்பி விடப்படுகிறது. இதனால் பெரிய கோவில்சாலை மட்டுமின்றி காந்திஜி சாலை, பழைய கோர்ட்டு சாலையும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது

தஞ்சாவூர் மாநகரில் முக்கிய மான பகுதிகளான பழைய பஸ் நிலையம், தஞ்சாவூர் பெரிய கோவில் ,காந்திஜி சாலை, உள்ளி ட்ட பகுதிகளுக்கு தேவையான இடங்களில் புதிய ரவுண்டாக்களை உருவாக்கவும் போக்குவரத்து சிக்னல்களை மேம்படுத்தவும் புதிய முயற்சியாக ஒரு வழிப்பாதைகளை உருவாக்கவும் ,தேவையான இடங்களில் வாகன நிறுத்தும் இடங்களை மேம்படுத்துவதன் மூலம் போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்கான சாத்திய கூறுகள் குறித்து கலெக்டர் ரேவதி ஆய்வு செய்தார்

தஞ்சாவூர் பெரிய கோயில் வளாகம் ,சோழன் சிலை, ஆயுதப்படை மைதானம் உள்ளிட்ட இடங்களுக்கு நேரில் சென்று ஆய்வு செய்த கலெக்டர் ரேவதி போக்குவரத்து துறை, போலீஸ் துறை ,மாநகராட்சி மற்றும் வருவாய் துறை அலுவலர்களுடன் ஆலோசனை நடத்தினர்

ஆய்வின்போது மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சுந்தரவதனம், மாவட்ட வருவாய் அலுவலர் தியாகராஜன், மாநகராட்சி ஆணையர் தீபனா விஸ்வேஸ்வரி, வருவாய் கோட்டாட்சியர் நித்யா, வட்டாரப் போக்குவரத்து அலுவலர் ஜெய்சங்கர் ,நெடுஞ்சாலைத்துறை உதவி இயக்குனர் கீதா மற்றும் போலீசார் உடன் இருந்தனர்



## மாற்று திறனாளிகளுக்கு அனைத்து நலத் திட்டங்களும் ஒரே இடத்தில் கிடைக்கும் சேவை மையம்

### ஈரோடு ஆட்சிதலைவர் கந்தசாமி தகவல்

ஈரோடு ஜூலை 10

ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆட்சியர் கந்தசாமி நிருபர்களுக்கு பேட்டி அளித்தார் அப்போது அவர் கூறியதாவது

அனைத்து வகையான மாற்றுத்திறனாளிகளுக்கும் தேவையான மறுவாழ்வு சேவைகளும், அரசு நலத்திட்ட உதவிகளும் இப்போது ஒரே இடத்தில் கிடைக்கும் ஒருங்கினைந்த சேவை மையம் தான் "விழுதுகள்" மையம். மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தி வரும் தமிழ்நாடு உரிமைகள் திட்டத்தின் கீழ் இந்த மையங்கள் செயல்பட்டு வருகின்றன. 21 வகையான மாற்றுத்திறனாளிகளுக்கும் தேவையான மறுவாழ்வு சேவைகள் மற்றும் அரசு நலத்திட்டங்களை எளிதாகப் பெறுவதற்கு இந்தத்திட்டம் வழிவகை செய்கிறது. ஈரோடு மாவட்டத்தில் வருவாய் கோட்ட அளவில் மொத்தம் 2 'விழுதுகள்" ஒருங்கிணைந்த சேவை மையங்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இந்த மையங்களில் நிபுணர்களின் மூலம் தரமான மறுவாழ்வு சேவைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இம்மையங்களில் பிசியோதெரபி. ஆக்குபேஷனல் தெரபி பேச்சு மற்றும் மொழிசார் சிகிச்சை உளவியல் ஆலோசனை, சிறப்புக்கல்வி. கண்பரிசோதனை. உள்ளிட்ட பல்வேறு மறுவாழ்வு சேவைகள் ஒரே இடத்தில் கிடைக்கின்றன. மேலும், பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளையும் எளிதாக பெறும் வகையில் இம்மையங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும் அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தல், பெற்றோர் மற்றும் பாதுகாவலர்களுக்கான பயிற்சி உள்ளிட்ட பல்வேறுமறுவாழ்வுசேவைகளும் வழங்கப்படுகின்றன. தமிழ்நாடு உரிமைகள் திட்டத்தின் கீழ் 18 வட்டாரங்களிலும் வட்டார அளவிலான விழுதுகள் சேவை மையங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. அவற்றில் தற்போது 11 மையங்களில் செயல்பாட்டில் உள்ளன. மீதமுள்ள 7 மையங்களின் கட்டடப்பணிகள் முடிக்கப்பட்டு விரைவில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படவுள்ளன. இந்த வட்டார மையங்கள் மூலம் மாற்றுத்திறனாளிகளுக்குத் தேவையான உளவியல் ஆலோசனை, பிசியோதெரபி. சிறப்புக் கல்வி, பேச்சு மற்றும் மொழி சார் சிகிச்சை ஆகிய நான்கு முக்கிய மறுவாழ்வு சேவைகள் அவர்களின் வீட்டிற்கு அருகிலேயே வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் சிறப்பம்சமாக, 255க்கும் மேற்பட்ட முன்களப்பணியாளர்கள் மாவட்ட முழுவதும் பணியாற்றி வருகின்றனர். அவர்கள் கிராமம் மற்றும் நகர்ப்புறங்களில் வசிக்கும் மாற்றுத்திறனாளிகளின் வீடுகளுக்கே நேரில் சென்று, அவர்களின் தேவைகளை கண்டறிந்து. தேவையான மறுவாழ்வு சேவைகள் மற்றும் அரசு நலத்திட்டங்கள் கிடைக்க வழிகாட்டி வருகின்றனர். கிராமப்புறம் மற்றும் நகர்ப்புறங்களில் வாழும் அனைத்து வகையான மாற்றுத்திறனாளிகளுக்கும் தரமான மறுவாழ்வு சேவைகளை வழங்கி, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றத்தை உறுதி செய்வதே தமிழ்நாடு உரிமைகள் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும் இவ்வாறு அவர் கூறினார்.

பேட்டியின் போது மாவட் ஆட்சியரின் நேர்முக தவியாளர் (பொது) தேன்மொழி மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலர்சங்கர்கணேஷ் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் மகேஸ்வரன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள சென்னை பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையில் அதிகவிபத்துகள்ஏற்படும்சாலைகள்குறித்து மாவட்ட ஆட்சியர்ரவிகுமார்பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்

# கன்னியாகுமரி எக்ஸ்பிரஸ் ரயிலில் பணத்தை தவறவிட்ட பயணி: ரயில்வே போலீசார் மீட்டுக் கொடுத்தனர்

நாகர்கோவில், ஜூலை 10

தூத்துக்குடி மாவட்டத்தை சேர்ந்தவர் தேவதாஸ் (58). சென்னை கன்னியாகுமரி எக்ஸ்பிரஸ் ரயிலில் முன்பதிவு செய்து, நேற்று முன்தினம் மாலை சென்னையில் இருந்துநெல்லைக்குரயிலில்கிளம்பினார். நேற்று அதிகாலை 3 மணி அளவில் இந்த ரயில்நெல்லைசந்திப்புரயில்நிலையத்தில் வந்தடைந்தது. அங்கிருந்து தனது ஊருக்கு பஸ்ஸில்செல்வதற்காகதேவதாஸ்ரயிலில் இருந்து இறங்கி வெளியே வந்தார். பஸ் நிலையம் வந்து பஸ் ஏற முற்பட்டபோது தனது பையில் இருந்த பர்ஸை காணாததால் தேவதாஸ் அதிர்ச்சி அடைந்தார். உடனடியாக அவர் நெல்லை ரயில் நிலையத்திற்கு திரும்பிச் சென்று கன்னியாகுமரி எக்ஸ்பிரஸ் ரயிலில் தனது பர்சை தவறவிட்டதை ரயில்வே போலீசாருக்கு தகவல் தெரிவித்தார். அவரது பார்சில் 13 ஆயிரத்து 500 ரூபாய் ரொக்க பணம் மற்றும் ஏடிஎம் கார்டுகள் இருப்பதாக கூறினார்.

இதை அடுத்து ரயில்வே போலீசார் இது குறித்துகன்னியாகுமரிஎக்ஸ்பிரஸ்ரயிலில் பணியில் ஈடுபட்டிருந்த போலீசாரிடம் தொடர்பு கொண்டு தகவல் தெரிவித்தனர். அவர்கள் உடனடியாக தேவதாஸ் பயணித்தப் பெட்டிக்கு சென்று அவர் அமர்ந்திருந்தஇடத்தில்தேடிப்பார்த்தனர். அப்பொழுது அங்கு அவரது பர்ஸ் கிடந்தது.

அந்த பர்சைதிறந்து பார்த்தபோது அதில் ரூபாய் 13 ஆயிரத்து 500 பணம், 6 ஏடிஎம் கார்டுகள் மற்றும் ஓட்டுநர் உரிமம் ஆகியவை பத்திரமாக இருப்பது உறுதி செய்யப்பட்டது. இதையடுத்து பர்ஸ் நாகர்கோவில் ரயில்வே போலீஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டது. அதன் பிறகு தேவதாசுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு, அவர் நாகர்கோவில் சந்திப்பு ரயில்வே போலீஸ் நிலையத்திற்கு வந்தார். பின்னர் ரயில்வே போலீசார் அவரது பணம் உள்ளிட்ட பொருட்களை அவரிடம் ஒப்படைத்தனர்.



கிருஷ்ணகிரி வட்டம், வேப்பனப்பள்ளி உள்வட்டம், சிகரமாகனப்பள்ளி கிராமத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு திட்ட முகாமில் 51 பயனாளிகளுக்கு ரூ.5 இலட்சத்து 85 ஆயிரத்து 662 மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் மற்றும் வேப்பனப்பள்ளி சட்டமன்ற உறுப்பினர் .பி.எஸ். சீனிவாசன்ஆகியோர்வழங்கினார்கள்.உடன்கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் .ஷாஜகான், தனித்துணை ஆட்சியர் சமூக பாதுகாப்பு திட்டம் பொ .கிருஷ்ணன், மாவட்ட வழங்கல் அலுவலர் .கீதாராணி ஆகியோர் உள்ளனர்.



கோவை இதய தெய்வம் மாளிகையில் அதிமுக சார்பில் கோவை மாநகர் மாவட்டம்,புறநகர் மத்திய மாவட்டம்,புறநகர் தெற்கு மாவட்டம்,அண்ணா தொழிற்சங்க பேரவை நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

# விளாத்திகுளம் அருகே கோவில் கொடை விழாவை முன்னிட்டு நடைபெற்ற மாபெரும் எருது கட்டு விடும் விழா

விளாத்திகுளம் ஜூலை 10

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் அருகே உள்ள பல்லாகுளம் கிராமத்தில் அருள்மிகு ஸ்ரீ முனீஸ்வரர் திருக்கோவில் ஆனி மாத கோவில் கொடை விழாவை முன்னிட்டு இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை சுமார் 200 ஆண்டுகளாக தோன்று தொட்டு மாபெரும் எருது கட்டு விடும் விழா நடைபெற்று வருகிறது,இதனைத் தொடர்ந்து இந்த ஆண்டு நடைபெற்ற மாபெரும் எருது கட்டு விடும் விழாவில், சிவகங்கை, ராமநாதபுரம், மதுரை,திருநெல்வேலி,தூத்துக்குடி உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து 60 காளைகள் போட்டியில் களம் இறக்கப்பட்டன, சுமார் 4 குழுவாக 200 க்கும் மேற்பட்ட மாடுபிடி வீரர்கள் கலந்து கொண்டனர்.



தர்ம முனிஸ்வரர் கோவிலில் இருந்து எருது கட்டும் வடத்தை பூஜை செய்த பின்பு,ஜிம்ளா கொட்டு பாரம்பரிய மேளம் வான வேடிக்கையுடன் வடம் ஊர்வலமாகக் கொண்டுவரப்பட்ட வடத்தை,வாடி வாசலில் இருந்து புறப்படும் காளையின் கழுத்தில் கட்டப்பட்டு, காளையின் உரிமையாளரால் கட்டப்பட்ட கயிறு அவிழ்த்து விட்டவுடன், வடத்துடன் காளை மைதானத்துக்குள் சீறிப்பாய்ந்து, கொம்புகளை தரையில் ஊனி ஆக்ரோசத்துடன் வந்த காளைகளை மைதானத்துக்குள் ஒவ்வொரு குழுவாக இருந்த மாடுபிடி வீரர்கள் சீறிப்பாய்ந்த காளைகளை அடக்கி பிடித்தனர்.

இதில் 30க்கும் மேற்பட்ட மாடுபிடி வீரர்களுக்கு காயம் ஏற்பட்டது,காயம் ஏற்பட்ட வீரர்களுக்கு விழா நிர்வாகம் சார்பில் முதலுதவி மருத்துவ சிகிச்சை வழங்கபட்டது.

தூத்துக்குடி மாவட்டத்தில் விளாத்திகுளம் அருகே உள்ள பல்லாகுளம் கிராமத்தில் மட்டுமே எருது கட்டு விடும் விழா 200 ஆண்டுகளாக நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கதாகும். போட்டியில் வெற்றி பெற்ற மாட்டின் உரிமையாளர்களுக்கு விழா கமிட்டியின் சார்பாக பரிசுத்தொகை வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இந்த மாபெரும் எருது கட்டு விடும் விழாவினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் மார்கண்டயேன் துவக்கி வைத்தார்.

இந்நிகழ்வில் விளாத்திகுளம் தெற்கு ஒன்றிய செயலாளர் இமானுவேல், விளாத்திகுளம் மேற்கு ஒன்றிய செயலாளர் அன்புராஜன், விளாத்திகுளம் மத்திய ஒன்றிய செயலாளர் ராமசுப்பு, பொதுக்குழு உறுப்பினர் ராஜாக்கண்ணு, ஊர் தலைவர் லிங்கம், விஸ்வநாதன், எருதுகட்டு விழா தலைவர் சரவணன், செயலாளர் கோபால், ஊர் கணக்காளர் பாலகிருஷ்ணன், வழக்கறிஞர்கள் பாபு செல்வகுமார், பொன்ராஜ் விளாத்திகுளம் சட்டமன்ற தொகுதி சமூக வலைதள அணி ஒருங்கிணைப்பாளர் கரண்குமார் ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி மகளிர் பிரிவு ஆனந்தி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் ஊர் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# பயனாளிகளுக்கு ரூ.85.03 இலட்சம் மதிப்பீட்டிலான பல்வேறு நலத்திட்ட உதவிகள்: கலெக்டர் வழங்கினார்

திருப்பூர் ,ஜூலை10




பெருந்தொழுவில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் மனிஷ் நாரணவரே , பல்லடம் சட்டமன்ற உறுப்பினர் ராம்குமார் முன்னிலையில் வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில் 120 பயனாளிகளுக்கு ரூ.85.03 இலட்சம் மதிப்பீட்டிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

இம்முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் மனிஷ் நாரணவரே தெரிவித்தாவது.

தமிழ்நாடு முதலமைச்சர் ஆணைக்கிணங்க, பொதுமக்களுக்கான அடிப்படை தேவைகள் அனைத்தும் முழுமையாக கோரிக்கைகளுக்கு உடனடியாக தீர்வு கண்டு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் திருப்பூர்மாவட்டத்தில்ள்ள ஏதேனும் ஒரு ஊராட்சியை தேர்ந்தெடுத்து அரசுத்துறை அலுவலர்கள் அங்குள்ள பொதுமக்களை நேரில் சந்தித்து அவர்களின் கோரிக்கைகளைக் கேட்டறிந்து அதற்கான தீர்வும் காணப்பட்டு வருகிறது. மேலும். பல்வேறு அரசு துறைகளால் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் தொடர்பாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.அந்த வகையில் நேற்று திருப்பூர் , பெருந்தொழுவு கிராமத்தில் மக்கள் தொடர்பு முகாம் நடைபெற்று வருகிறது. இந்த முகாமின் முக்கிய நோக்கம் மக்களின் குறைகளை தீர்வு காண்பது ஆகும். மேலும் தமிழ்நாடு அரசின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் பற்றி தொடர்புடைய அலுவலர்கள் பொதுமக்களுக்கு விரிவாக எடுத்துரைத்தார்கள். குறிப்பாக சமூகநலத்துறை, வேளாண்மைத்துறை, வருவாய்த்துறை, தாட்கோ, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, தோட்டக்கலைத்துறை, ஆதிதிராவிடர் நலத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் பணிபுரியும் அலுவலர்கள் துறையின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் குறித்தும், இப்பகுதியில்ள்ள கிராமங்களுக்கு நேரடியாக களஆய்வு மேற்கொண்டு பொதுமக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் குறித்தும் கலந்துரையாடி அப்பகுதி மக்களின் கோரிக்கைகள் மீது தனி கவனம் செலுத்தி தீர்வு காண வேண்டும். இந்த மக்கள் தொடர்பு முகாமில் அரசின் திட்டங்களை பற்றி பொதுமக்களுக்கு விரிவாக எடுத்துரைப்பதுடன் மட்டுமில்லாமல் பொதுமக்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலம் மற்றும் துறை சார்ந்த அலுவலகங்களுக்கு வரும்போது அலுவலர்கள் பொறுமையாகவும் நிதானமாகவும் அரசின் திட்டங்கள் குறித்து எடுத்துரைக்க வேண்டும். 100% அனைத்து திட்டங்கள் குறித்தும், எவ்வாறு விண்ணப்பிக்க வேண்டும் என்பது பற்றியும், தேவையான ஆவணங்கள் இணைக்க வேண்டும் என்பது பற்றியும் முழுமையாக எடுத்துரைக்க வேண்டும். பொதுமக்கள் அளிக்கும் அனைத்து கோரிக்கை மனுக்களுக்கும் உடனடியாக தீர்வு வழங்க வேண்டும், கோரிக்கை மனுக்களுக்கு தீர்வு வழங்க முடியாத பட்சத்தில் முறையான விளக்கத்தினை சமந்தப்பட்ட துறை அலுவலர்கள் மனுதாரர்களுக்கு தெரிவிக்க வேண்டும். அதனைத் தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் மனீஷ் நாரணவரே பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டு பல்வேறு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சி அரங்குகளை பார்வையிட்டார்கள்.



தருமபுரி மாவட்டம் கடத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் கடத்தூர் மற்றும் பொ. மல்லாபுரம் ஆகிய பேரூராட்சிகளின் மக்கள் தொகை கணக்கெடுப்பு 2027 பணிகளுக்காக நியமிக்கப்பட்டுள்ள கணக்கெடுப்பாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களுக்கான பயிற்சி வகுப்பு நடைபெற்று வருவதை மாவட்ட ஆட்சியர் சரவணன் நேரில் பார்வையிட்டு ஆலோசனை வழங்கினார். இந்த ஆய்வின்போது பாப்பிரெட்டிப்பட்டி வட்டாட்சியர் பார்வதி, வட்டார வளர்ச்சி அலுவலர் சுருளிநாதன் உள்ளிட்ட தொடர்புடைய அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.



தருமபுரி மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி வட்டம் மணியம்பாடி கிராமத்தில் இணைய வழி சான்றிதழ்களில் உள்ள தள்ளுபடி மனுக்கள் குறித்து மாவட்ட ஆட்சியர் சரவணன் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.இந்தஆய்வின்போதுபாப்பிரெட்டிப்பட்டி வட்டாட்சியர் பார்வதி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உடனிருந்தனர்.

# இந்தியாவில் நிதி மோசடி இழப்புகள் அதிகரித்துள்ளது: பயோகேட்ச் சர்வே முடிவுகள்

சென்னை,ஜூலை 10

இந்தியாவில் பிற உலக நாடுகளை விட வங்கிக் கணக்கு மற்றும் நிதி மோசடி முயற்சிகள் அதிகரித்துள்ளதாக வங்கித் துறையின்தலைவர்கள்தெரிவித்துள்ளனர். மேலும் மோசடி நடைபெறும் வேகம் குறித்த கவலை மீதான கருத்தாய்வில் 25 நாடுகளில்இந்தியாமுதலிடத்தில்உள்ளது.

செயற்கை நுண்ணறிவு (ஏஐ) மூலம் நடைபெறும் நிதி மோசடிகளின் தற்போதைய மற்றும் எதிர்கால நிலை குறித்து உலகெங்கிலும் உள்ள நிதி சேவை வழங்கும் நிறுவனங்கள் மிகுந்த கவலை கொண்டுள்ளன.

பாரம்பரிய மோசடி தடுப்பு முறைகளின் செயல்திறனை செயற்கை நுண்ணறிவு உதவியுடன் நடைபெறும் வங்கி செயல்பாடுகள் குறைக்கும் என 60% பேர் எதிர்பார்க்கின்றனர்.

இதுகுறித்து"பயோகேட்ச்"நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி காடி மேசோர் பேசுகையில், “வாடிக்கையாளர்கள் மின் வர்த்தக தளங்கள் மற்றும் நிதி நிறுவனங்களுடன் எவ்வாறு தொடர்பு கொண்டு பரிவர்த்தனைகளில் ஈடுபடுகிறார்கள் என்பதை செயற்கை நுண்ணறிவு மாற்றத் தொடங்கியுள்ளது. மோசடிகள் மற்றும் பிற நிதிக் குற்றங்களை குற்றவாளிகள் எவ்வாறு செய்கிறார்கள் என்பதையும் ஏஐ மற்றும் டிஜிட்டல் பயன்பாடு தொடர்ந்து வேகமாகவும், தானியக்க செயல்பாடாகவும் மாறி வருவதால், வழக்கமான அடையாள சரிபார்ப்புகளைத் தாண்டி, வாடிக்கையாளர்களின் நடத்தை, நோக்கம் மற்றும் நம்பிக்கையை உடனடியாகவும், ஆழமாகவும் புரிந்து கொள்ளும் முறைக்குநாம்நகரவேண்டும்” என்று வலியுறு த்தினார். செயற்கை நுண்ணறிவு கருவிகள் பரிவர்த்தனைகளை பொதுவாக தொடங்கும் எதிர்காலத்தில், ஏஐ உதவியுடன் செய்யப்படும் உண்மையான செயல்பாடுகளுக்கும், தீங்கிழைக்கும் ஏஐ செயல்பாடுகளுக்கும் இடையிலான வித்தியாசத்தைக் கண்டறிவது மிகவும் கடினமாக இருக்கும் என்று 72% பேர் நம்புகின்றனர். இந்திய நிதி நிறுவனங்களைச் சேர்ந்த 100 மோசடி தடுப்பு மற்றும் இடர்வாய்ப்பு இணக்க நிலை துறை தலைவர்களிடம் இந்தக் கருத்தாய்வு நடத்தப்பட்டது. முந்தைய ஆண்டைவிட கடந்த ஆண்டில் நிதிமோசடிமுயற்சிகள்அதிகரித்துள்ளதாக 90% இந்திய வங்கித் துறை தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

### காங்கிரஸ் கட்சி சார்பில்

# காமராஜர் பிறந்தநாள் விழா கொண்டாடுவது குறித்து நிர்வாகிகளின் ஆலோசனைகூட்டத்தில் தீர்மானம்

கிருஷ்ணகிரி, ஜூலை 10



தமிழக காங்கிரஸ் தலைவர் மாணிக்கம் தாகூர் பெருந்தலைவர் காமராஜரின் பிறந்த நாளை நாடு முழுவதும் ஒரு வாரம் சிறப்பாக கொண்டாட வேண்டும் என அறிவித்து ள்ளார்,

அவரின் ஆணையின் படி கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட காங்கிரஸ் கட்சி அலுவலகத்தில் பெருந்தலைவர் காமராஜர் பிறந்தநாள் விழா கொண்டாடுவது குறித்த ஆலோசனை கூட்டம் நடைபெற்றது

கிருஷ்ணகிரி காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் கோபிநாத் அறிவுறுத்தலின்படி நடைப்பெற்ற இக்கூட்டத்திற்கு கிழக்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் எம். சி, ரகு தலைமையில் நடைப்பெற்ற இந்த கூட்டத்திற்கு திருவண்ணாமலை முன்னாள் மாவட்ட காங்கிரஸ் தலைவர் குமார் சிறப்புஅழைப்பாளராககலந்துக்கொண்டு வருகின்ற 15ம் தேதி நாடு முழுவதும் பெருந்தலைவர்காமராஜர்பிறந்தநாளினை வெகு விமர்ச்சியாக கொண்டடாப்பட வேண்டும் என்று வழியுறுத்தினார். மேலும் இக்கூட்டடத்தினைத் தொடந்து பெருந்தலைவர் காமராஜர் 1954ல் முதல் முதலில் குடியாத்தம் தொகுதியில் காங்கிரஸ் கட்சி சார்பில் போட்டியிட்டு வெற்றிப் பெற்று தமிழக முதல்வராக பதவி ஏற்றுள்ளதை கொண்டாடப்பட உள்ள இந்த விழவில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இருந்து காங்கிரஸ் நாடளுமன்ற உறுப்பினர் கோபிநாத் தலைமையில் பெருந்திரளாக காங்கிரஸ் கட்சியினர் கலந்துக் கொள்வதுதமிழககாங்கிரஸ்தலைவர்மாணிக்கம் தாக்கூர் அறிவித்துள்ளதின்படி பெருந்தலைவர் காமராஜரின் பிறந்த நாளினை கிருஷ்ணகிரி மாவட்டதில் ஒருவாரம் சிறப்பாக கொண்டாட வேண்டும் உள்ளிட்ட பல்வேறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது மேலும் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் காங்கிரஸ் கட்சியின் மாநில பொதுக்குழு உறுப்பினர் ஏகாம்பாவாணன்,முன்னாள் மாவட்ட தலைவர்கள் கிருஷ்ணமூர்த்தி, நாராயண மூர்த்தி, கிழக்கு மாவட்ட காங்கிரஸ் துணைத் தலைவர் பி,சி,சேகர் சேலம் மண்டல ரயில்வே கோட்ட உறுப்பினர் ரஹ்மத்துல்லா மற்றும் காங்கிரஸ் கட்சி சேர்ந்த வாஜித் பாஷா முன்னாள் காங்கிரஸ் தலைவர் தி.க ராமன் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.

# கால்நடைகளுக்கு காப்பீடு விவசாயிகள் பயன் பெறலாம்: கலெக்டர் தகவல்

தஞ்சாவூர் ஜூலை 10

தஞ்சாவூர் மாவட்டத்தில் கால்நடை களுக்கு காப்பீடு செய்து விவசாயி கள் பயன்பெறலாம். இது குறித்து மாவட்ட கலெக்டர் ரேவதி வெளியிட் டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப் பதாவது:

மத்திய ,மாநில அரசுகளின் நிதி உதவியுடன் தேசிய கால்நடை இயக்கத்தின்கீழ் கால்நடை காப்பீடு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது .தஞ்சாவூர்மாவட்டத்தில் திட்டத்தின் கீழ் ஒரு முறை கன்று ஈன்ற பசு ,எருமை ,செம்மறி ஆடு, வெள்ளாடு மற்றும் பன்றிகள் என மொத்தம் 2,900கால்நடைகளுக்கு காப்பீடு செய்யப்பட உள்ளது

பசு மற்றும் எருமைகளுக்கு காப்பீடு பிரிமியம் 1.25 சதவீத மாகும், செம்மறியாடு, வெள்ளாடு மற்றும் பன்றிகளுக்கு 1.65 சதவீதமாக நிர்ணயிக்கப்பட்டுள் ளது. மேலும் சேவை வரியில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது

ஒருமுறை கன்று ஈன்ற பசு மற்றும் எருமைகள் 2 1/2 வயது முதல் 8 வயது வரை காப்பீடு செய்யப்படலாம். ஒரு பயனாளிக்கு அதிகபட்சம் 10 மாடுகள் வரை காப்பீடு செய்ய அனுமதிக்கப்படும்

செம்மறியாடு மற்றும் வெள்ளா டுகள் 1 வயது முதல் 3 வயது வரை யிலும் அதிகபட்சம் 10 ஆடுகள் வரையிலும் காப்பீடு செய்யலாம் பன்றிகள் 1 முதல் 5 வயது வரை காப்பீடு செய்யலாம்

இந்த திட்டம் தொடர்பான கூடுதல் விவரங்களுக்கு அருகில் உள்ள கால்நடை மருந்தகம் அல்லது கால்நடை உதவி மருத்து வரை தொடர்பு கொள்ளலாம். இந்தத் திட்டம் வருகிற 30 .9 .2026 க்குள் செயல்படுத்த பட உள்ளதால் தகுதி உள்ள கால்நடை வளர்ப் போர், விவசாயிகள் உரிய ஒத்து ழைப்பு வழங்கி பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு இதில் கூறப்பட்டுள்ளது

### புதிய மருத்துவ காப்பீட்டு திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று வலியுறுத்தி

# ஈரோட்டில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம்




ஈரோடு ஜூலை 10

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் ஈரோடு மாவட்ட மையம் சார்பில் ஈரோடு கலெக்டர் அலுவலக வளாகத்தில் ஆர்ப்பாட்டம் நடந்தது .அரசு ஊழியர்களுக்கு கட்டணம் இல்லா சிகிச்சை வழங்கும் வகையில் திருத்திய அரசாணை வெளியிட வேண்டும். புதிய மருத்துவகாப்பீட்டு திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடந்தது .மாவட்ட துணை தலைவர் செந்தில்நாதன் தலைமையில் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில் துணைத் தலைவர்கள் செந்தில்நாதன், ராக்கி முத்து, கௌரி சங்கர், இணைச் செயலாளர்கள் சரவண மணி, சசிகலா, சுரேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆர்ப்பாட்டம் குறித்து மாவட்ட செயலாளர் விஜய் மனோகரன் விளக்கி பேசினார். கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பப்பட்டன. முடிவில் மாவட்ட பொருளாளர் சுமதி நன்றி கூறினார். ஆர்ப்பாட்டத்தில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் இன்று பனிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்று எந்த உயர் கல்விக்கு சேராத மாணவர்களுக்கு, இடைநின்ற மற்றும் சிறப்பு தேர்வு முடிவுக்கு பின் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கான உயர்கல்வி வழிகாட்டுத் தொடர்பான மீள் ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் விஷூ மகாஜன் தலைமையில் நடைபெற்றது.

# சமூக நல்லிணக்க ஊராட்சி விருது 2026 – 2027

சிவகங்கை, ஜூலை 10

சாதிப் பாகுபாடற்ற சமூக நல்லிணக்கத்தைக் கடைபிடிக்கும் ஊராட்சிகளை கௌரவிக்கும் வகையில், ஆண்டு தோறும் தகுதி படைத்த 10 ஊராட்சிகளுக்கு தலா 1 கோடி ரூபாய் ஊக்கத் தொகையும் அதனுடன், சமூக நல்லிணக்க ஊராட்சிக்கான விருதும் வழங்கி தமிழ்நாடு அரசு சிறப்பித்து வருகிறது.இதனடிப்படையில் 202627 ஆம் ஆண்டிற்கான "சமூக நல்லிணக்க ஊராட்சி" விருது பெற விரும்பும்ஊராட்சிகள்விண்ணப்பபடிவத்தினையும்,அதற்குரிய ஆவணங்களையும் இணைத்து அந்தந்த மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 31.07.2026க்குள் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. இவ்விருதிற்கான விண்ணப்ப படிவத்தினை https://cms.tn.gov.in/cms_migrated/document/forms/social_award_app_26_27.pdfஎன்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் அல்லது மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்தில் விண்ணப்பத்தை பெற்றுக் கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா,இ.ஆ.ப., தெரிவித்துள்ளார்.

### கடத்தூர் தனியார் மருத்துவமனையில்

# நூற்றுக்கணக்கான காலாவதி மருந்துகள் பறிமுதல்

### குழந்தைக்கு வழங்கியதால் அம்பலம் பொதுமக்கள் அதிர்ச்சி.



தருமபுரி ஜூலை 10

தருமபுரி மாவட்டம் கடத்தூர் பகுதியில் இயங்கி வரும் ஆர்.ஆர். தனியார் மருத்துவமனையில் காலாவதியான நூற்றுக்கணக்கான மருந்துகள் மற்றும் மாத்திரைகள் பறிமுதல் செய்யப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கடத்தூர் பகுதியைச் சேர்ந்த விக்னேஷ் சோபர்நாயகி தம்பதியினரின் குழந்தை சன்விக்கா (வயது 1 1/2) உடல் நலம் பாதிக்கப்பட்ட தனது குழந்தைக்கு சிகிச்சைக்காக ஆர்.ஆர். மருத்துவமனைக்கு சென்றுள்ளார். சிகிச்சைக்கு பின்னர் வழங்கப்பட்ட மருந்தின் காலாவதி தேதி முடிந்திருப்பதை பெற்றோர் பார்து அதிர்ச்சியடைந்தனர். இதுகுறித்து குழந்தையின் பெற்றோர் மருந்து கட்டுப்பாட்டுத் துறைக்கு புகார் அளித்தனர். புகாரின் பேரில் தருமபுரி மாவட்ட மருந்தியல் ஆய்வாளர் கோகிலா மருத்துவமனையில் திடீர் சோதனை நடத்தினர்.

அப்போது மருத்துவமனை முழுவதும் சோதனை செய்ததில் நூற்றுக்கணக்கான காலாவதியான மருந்துகள், மாத்திரைகள் மற்றும் ஊசிகள் இருப்பு வைக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அனைத்தையும் பறிமுதல் செய்தனர். பறிமுதல் செய்யப்பட்ட மருந்துகளை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவும், மருத்துவமனை நிர்வாகம் மற்றும் மருத்துவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் பரிந்துரை செய்யப்படும் என தெரிவித்தனர்.

இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. கடத்தூர் பகுதியில் நீண்ட நாட்களாகவே காலாவதியான மருந்துகள் நோயாளிகளுக்கு வழங்கப்பட்டு வருவதாக பொதுமக்கள் குற்றம்சாட்டுகின்றனர். இதனைத் தொடர்ந்து தருமபுரி மாவட்ட ஆட்சியரும், சுகாதாரத்துறையும் உடனடியாக மாவட்டம் முழுவதும் உள்ள தனியார் மருத்துவமனைகளில் ஆய்வு நடத்த வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். மேலும் தமிழக முதல்வர் மற்றும் சுகாதாரத்துறை அமைச்சர் உடனடியாக சிறப்பு குழு அமைத்து தனியார் மருத்துவமனைகளை கண்காணித்து குழந்தைகளின் மற்றும் நோயாளிகளின் உயிரை காக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளனர்.

# திருச்சி-சேலம் ரயில் பயணிகளுக்கு முக்கிய அறிவிப்பு

கரூர், ஜூலை 10

கரூர் ரயில் நிலையத்தில் தண்டவாளப் புதுப்பிப்பு மற்றும் பராமரிப்புப் பணிகள் நடைபெறவுள்ளதால், நாளை (ஜூலை 9) அன்று சில ரயில்களின் இயக்கத்தில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

சேலம் ரயில்வே கோட்டம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள தகவல்: மயிலாடுதுறை சந்திப்பிலிருந்து காலை 6.15 மணிக்கு புறப்படும் மயிலாடுதுறைசேலம் எக்ஸ்பிரஸ் (வண்டி எண்: 16811), விராரக்கியம் நிலையம் வரை மட்டுமே பயணிக்கும். இந்த ரயில் வழக்கத்தை போல விராரக்கியம் மற்றும் சேலம் சந்திப்புக்கு இடையே இயக்கப்படாது.

அதேபோல், சேலம் சந்திப்பிலிருந்து நாளை மதியம் 2.05 மணிக்குக் கிளம்ப வேண்டிய சேலம்மயிலாடுதுறை எக்ஸ்பிரஸ் (வண்டி எண்: 16812), கரூர் சந்திப்பிலிருந்து மதியம் 3.40 மணிக்குத் தனது பயணத்தைத் தொடங்கும். இந்த ரயில் சேலம் சந்திப்பு மற்றும் கரூர் சந்திப்புக்கு இடையே இயக்கப்படாது. இது கரூர் ரயில் நிலையத்திலிருந்து பயணத்தைத் தொடங்கி மயிலாடுதுறை ரயில் நிலையம் வரை மட்டுமே செல்லும். பாலக்காடு டவுன் நிலையத்திலிருந்து காலை 6.30 மணிக்கு புறப்படும் பாலக்காடு டவுன்திருச்சி எக்ஸ்பிரஸ் (வண்டி எண்: 16844), கரூர் சந்திப்புடன் ரயில் பயணம் நிறைவு பெறும்.

பராமரிப்புப் பணிகள் முடிந்த பிறகு, வழக்கமான சேவையைப் போலவே அதே நிறுத்தங்களுடன், கரூர் முதல் திருச்சி சந்திப்பு வரை முன்பதிவு இல்லாத சிறப்பு ரயிலாக இது இயக்கப்படும். கோயம்புத்தூர் சந்திப்பிலிருந்து காலை 8 மணிக்குக் கிளம்பும் கோயம்புத்தூர் நாகர்கோவில் எக்ஸ்பிரஸ் (வண்டி எண்: 16322), கோயம்புத்தூர்மற்றும்திண்டுக்கல்இடையேபோத்தனூர், பொள்ளாச்சி மற்றும் பழனி வழியாக மாற்றுப் பாதையில் இயக்கப்படும். இதன் விளைவாக, இந்த ரயில் கோயம்புத்தூர்வடக்கு, பீளமேடு, சிங்காநல்லூர், இருகூர், சூலூர் ரோடு, சோமனூர், திருப்பூர், ஊத்துக்குளி, இங்கூர், ஈரோடு, பாசூர், கொடுமுடி, புகலூர், கரூர், பாளையம் மற்றும் எரியோடு ஆகிய ரயில் நிலையங்களில் நிற்காது என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், போத்தனூர் மற்றும் பொள்ளாச்சி ரயில் நிலையங்களில் கூடுதல் நிறுத்தங்களைக் கொண்டிருக்கும் என்று அந்தச் செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலே குறிப்பிடப்பட்டுள்ள ரயில் தடங்களில் பயணிக்க திட்டமிட்டுள்ளபயணிகள்இந்தமாற்றங்களைகவனத்தில் கொண்டு தங்கள் பயணங்களை திட்டமிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.



சென்னை மேற்கு தாம்பரம் அரங்கநாதபுரம் காந்தி ரோட்டில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ செங்கேணி அம்மன் ஆலய புனராவர்த்தன அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக விழா வெகு சிறப்பாக நடைபெற்றது, ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர் வருகை தந்த அனைவருக்கும் ஆலயம் சார்பில் தீர்த்த பிரசாதம் அன்னதானம் வழங்கப்பட்டது, கும்பாபிஷேக விழாவில் தாம்பரம் நகராட்சி துணை மேயர் காமராஜ் கலந்து கொண்டு சிறப்பித்தார், ஆலய தலைவர் சம்பத், செயலாளர் கல்யாண குமார் என்கின்ற கேசவன், பொருளாளர் பத்மநாபன் மற்றும் விழா குழுவினர் சிறப்பாக செய்திருந்தனர்.



# குமரியில் சாலை பணிகள்: கலெக்டர் நேரில் பார்வையிட்டு ஆய்வு

நாகர்கோவில், ஜூலை. 10

கன்னியாகுமரி மாவட்டத்திற்குட்பட்ட பகுதிகளில்பழுதடைந்துள்ளசாலைகளை சீரமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. அதன்ஒருபகுதியாக அழகியமண்டபம் நான்கு வழிசாலையில் தினந்தோறும் போக்குவரத்து நெரிசல் அதிகம் ஏற்படுவதோடு, சாலைகளும் பழுதடைந்து உள்ளது. இச்சாலையினை மேம்படுத்திட விடுத்த கோரிக்கையினை நிறைவேற்றும் வகையில் மாவட்ட நெடுஞ்சாலைத்துறையின் சார்பில் ஒருங்கிணைந்த சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.2.85 கோடி மதிப்பில் அழகியமண்டபம் சந்திப்பில் புதிதாக ரவுண்டண அமைத்து, அச்சாலையினை மேம்படுத்தும் பணி நடைபெற்றுவருகிறது.இப்பணிகளைமாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். பின்னர் அவர் தெரிவிக்கையில்:

கருங்கல் பகுதியில் ரூ.2 கோடி மதிப்பில் புதிதாக கட்டப்பட்டு வரும் பொதுப்பணித்துறை அலுவலகம் மற்றும் மேல்புறம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட செருவல்லூர் பகுதியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தின் கீழ் சாலை ஓரங்களில் மரக்கன்றுகள் நடுவது ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும் மேல்புறம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பிறாகல் சானல்முகவூர் சாலை பலப்படுத்தும் பணி முதல்வரின் கிராம சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.51.50 இலட்சம் மதிப்பில் நடைபெற்று வருவதை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளபட்டது. மாவட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் ரூ.5.36 கோடி மதிப்பில் நடைபெற்றுவரும் வளர்ச்சி திட்டப்பணிகள் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறு கூறினார்.

நெடுஞ்சாலைத்துறை கோட்ட செயற்பொறியாளர் சத்தியமூர்த்தி, பொதுப்பணித்துறை பொறியாளர்கள், துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

### காரியமங்கலம் அருகே

# தனியார் பேருந்து பள்ளத்தில் கவிழ்ந்து விபத்து: 16 பயணிகள் காயம்



தருமபுரி ஜூலை 10

தருமபுரி மாவட்டம் காரிமங்கலம் அருகே தனியார் பேருந்து ஒன்று நிலைதடுமாறி பள்ளத்தில் கவிழ்ந்த விபத்தில் 16 பயணிகள் காயமடைந்தனர்.

கிருஷ்ணகிரியில் இருந்து தருமபுரி நோக்கி 'குமரவேல்' என்ற தனியார் பேருந்து (பதிவு எண்: TN 29 BF 4700) தேசிய நெடுஞ்சாலையில் சென்று கொண்டிருந்தது.

காரிமங்கலத்தை சேர்ந்த சந்தோஷ் என்ற டிரைவர் பேருந்தை ஓட்டி சென்றார். காரிமங்கலம் அடுத்த பொன்னேரி கிராமம் அருகே சென்றபோது, ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்த பேருந்து, திடீரென நிலைதடுமாறி நெடுஞ்சாலையின் இடது புறமிருந்த பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் பேருந்தில் பயணம் செய்த 16 பயணிகள் காயமடைந்தனர். நல்வாய்ப்பாக இந்த விபத்தில் உயிர்ச்சேதம் ஏதும் ஏற்படவில்லை.

விபத்து குறித்து தகவலறிந்ததும் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த காரிமங்கலம் காவல்துறையினர் மற்றும் பொதுமக்கள், காயமடைந்தவர்களை மீட்டு 108 ஆம்புலன்ஸ் மூலம் தருமபுரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர். அங்கு அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. விபத்து காரணமாக அப்பகுதியில் சிறிது நேரம் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது. காரிமங்கலம் காவல்துறையினர் விபத்துக்குள்ளான வாகனத்தை அப்புறப்படுத்தி, போக்குவரத்தை சீர்செய்தனர். மேலும், விபத்து குறித்து காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



கோவை ஆட்சியர் அலுவலகத்தில் சிறுபான்மை நலத்துறை சார்பில் கோயம்புத்தூர் கிறிஸ்தவ மகளிர் உதவும் சங்கம் மூலம் மகளிருக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

### ஊத்துக்கோட்டையில்

# வசந்த் அண்ட் கோ புதிய கிளை திறப்பு விழா



திருவள்ளூர், ஜூலை 10

திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டை, அரசு போக்குவரத்து பணிமனை அருகே கட்டப்பட்ட பிரம்மாண்ட வசந்த் அன் கோ திறப்பு விழாவில் வசந்த் அன் கோ நிர்வாக பங்குதாரர்கள் தமிழ் செல்வி வசந்தகுமார், கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி திறந்தும், குத்துவிளக்கு ஏற்றி விற்பனையை துவக்கி வைத்தனர்.

மேலும் டிவி,பிரிட்ஜ்,வாஷிங் மெஷின் , செல்போன்,லேப்டாப் உள்ளிட்ட எலக்ட்ரானிக் சாதனங்களும், மற்றும் கட்டில் மெத்தை உள்ளிட்ட வீட்டு உபயோக பொருட்களும் விற்பனைக்கு தொடங்கியது. மேலும் 25 ஆயிரம் ரூபாய்க்கு மேல் பொருட்கள் வாங்குபவர்களுக்கு தங்க நாணயம் இலவசமாக வழங்கப்படும் என்பதால் முதல் நாளே ஊத்துக்கோட்டை, அதன் சுற்றுவட்டார பகுதியிலிருந்து பொதுமக்கள்போட்டிபோட்டுக்கொண்டு ஏராளமான வாடிக்கையாளர்கள் கடையில் பொருட்களை வாங்க வருகை புரிந்தனர்.

அதனைத் தொடர்ந்து கடையின் பணியாளர்களுடன் கேக் வெட்டிக் உற்சாகமாக கொண்டாடி மகிழ்ந்தனர், இதில் கிளை மேலாளர் கிரன், கிஷோர், மற்றும் தமிழ்நாடு காங்கிரஸ் மாநில பொதுச் செயலாளர் விநாயகமூர்த்தி, ஊத்துக்கோட்டை காங்கிரஸ் பேரூராட்சி தலைவர் கோவிந்தசாமி, துணைத்தலைவர் அந்தோணிசேவியர், பொறுப்பாளர் கருணைக்கண்ணன், ஊத்துக்கோட்டை காங்கிரஸ் மகளிர் அணி தலைவி அம்சா, செயலாளர் பூபாலன், உட்பட பலர் கலந்து கொண்டனர்.




### குமரியில்

# சுய கணக்கெடுப்பு பணி விழிப்புணர்வு பேரணி: கலெக்டர் துவக்கி வைத்தார்

நாகர்கோவில், ஜூலை.10

கன்னியாகுமரி மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் சுயகணக்கெடுப்பு பணி நடைபெறவுள்ளதையொட்டி, நாகர்கோவில் மாநகராட்சி சார்பில் இப்பணிகள் குறித்து பொது மக்களிடையே புரிதலை ஏற்படுத்தும் வகையில் வடசேரி பேருந்து நிலையத்தில் விழிப்புணர்வு கையெழுத்து இயக்கம் மற்றும் பேரணி நடைபெற்றது.

மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் தலைமை வகித்து, கொடியசைத்து துவக்கி வைத்தார். நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் ஐஸ்வர்யா,உதவி ஆட்சியர் பயிற்சி மோனிகா முன்னிலை வகித்தனர். தொடர்ந்து கலெக்டர் தெரிவிக்கையில்:

இந்தியாதனது மக்கள் தொகை கணக்கெடுப்பான "சென்சஸ் 2027"ஐ முழுவதுமாக டிஜிட்டல் முறையில் நடத்த தயாராகி வருகிறது. நாடு முழுவதும் நடத்தப்படும் இந்த சர்வே வாயிலாக மக்கள் தொகை குறித்த புள்ளிவிவரங்களை முழுமையாக அறிய முடியும்.

நமது கன்னியாகுமரி மாவட்டத்தில் ஜூலை 17ம் தேதி முதல் ஜூலை 31ம் தேதி வரை நடைபெறவுள்ளது. கணக்கெடுப்பு படிவத்தில் 33 கேள்விகள் இடம்பெற்றிருக்கும். தனிநபர் பாதிக்க கூடிய எந்தவொரு தகலும் இடம்பெறாது. அவ்வாறு இடம்பெறும் எனில் இரகசியமாக வைக்கப்படும். இக்கணக்கெடுப்பு பணியில் மாவட்டத்திற்குட்பட்ட பள்ளி ஆசிரியர்கள், மாநகராட்சி, நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சிகளில் பணிபுரியும் பணியாளர்கள் உள்ளிட்டோர் இடம்பெறுவர். ஒரு கணக்கெடுப்பாளருக்கு 200 விண்ணப்பங்கள் பூர்த்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் ஒவ்வொரு நாளும் குறைந்தபட்சம் 20 நபர்களை சந்தித்து, தகவல்களை பதிவு செய்ய வேண்டும். 6 கணக்கெடுப்பாளர்களுக்கு ஒரு மேற்பார்வையாளர் நியமிக்கப்பட்டுள்ளார்கள். என கூறினார்.

நடைபெற்ற பேரணியில் மாநகராட்சி நகர்நல அலுவலர் மரு.சரோஜா, மாநகராட்சி அலவலர்கள், நாகர்கோவில் பெண்கள் மற்றும் அறிவியல் கல்லூரி மாணவ மாணவியர்கள், தன்னார்வலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

# இருமத்தூரில் மக்கள் தொடர்பு திட்ட முகாம்

### 114 பேருக்கு நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் வழங்கினார்.



தருமபுரி ஜூலை 10

தருமபுரி மாவட்டம் காரிமங்கலம் தாலுகா இருமத்தூர் கிராமத்தில் மக்கள் தொடர்பு திட்டம் முகாம் நடைபெற்றது. இந்த முகாமில் மாவட்ட ஆட்சியர் சரவணன் தலைமை தாங்கி பொது மக்களிடம்இருந்துகோரிக்கைமனுக்களை பெற்றுக் கொண்டார். இந்த மனுக்களை சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் கொடுத்து அதன் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார் . இந்த முகாமுக்கு அரூர் சட்டமன்ற உறுப்பினர் சம்பத்குமார் முன்னிலை வகித்தார். முகாமில் வருவாய் துறை சார்பில் 41 பேருக்கு ரூ.4 லட்சத்தில் இலவச வீட்டுமனை பட்டா , சமூக பாதுகாப்பு திட்டம் மூலம் 5 பேருக்கு ரூ.1.82 லட்சத்தில் இயற்கை மரணம், ஈமச்சடங்கு உதவித்தொகை, உணவுப் பொருள் வழங்கள் துறையின் சார்பின் 47 பேருக்கு ரூ.7.56 லட்சத்தில் மின்னணு குடும்ப அட்டைகள், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறையின் சார்பில் 4 பேருக்கு ரூ.16 லட்சத்தில் வீட்டு வசதி திட்டத்தின் நல திட்ட உதவிகள் உட்பட 114 பேருக்கு 37 லட்சத்து 78 ஆயிரம் மதிப்பீட்டிலான பல்வேறு துறைகளில் சார்பில் அரசு நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் சரவணன் வழங்கினார். இந்த முகாமில் அரூர் உதவி ஆட்சியர் கோவிந்தன், சமூக பாதுகாப்பு திட்ட தனித்துணை ஆட்சியர் செல்வி, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் சரவணன், கால்நடை பராமரிப்பு துறை மண்டல இணை இயக்குனர் முருக லட்சுமி, தாசில்தார் சிவக்குமார் உள்ளிட்ட தொடர்புடைய அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### நாகர்கோவிலில் மாவட்ட நிர்வாகம் சார்பில்

# மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம்

நாகர்கோவில், ஜூலை. 10

கன்னியாகுமரி மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், நாகர்கோவில் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக / நகர்புர வாழ்வாதார இயக்கம் (மகளிர் திட்டம்) இணைந்து நடத்தும் மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் 25072026 சனிக்கிழமை அன்று நாகர்கோவில் பயோனியர் குமாரசுவாமி கல்லூரியில் வைத்து நடத்தப்படவுள்ளது. இம்முகாமில் நூற்றுக்கும் மேற்பட்ட தனியார்துறை நிறுவனங்கள் கலந்து கொள்ள உள்ளன.

இந்த வேலைவாய்ப்பு முகாமில் 8ம் வகுப்பு, 10ம் வகுப்பு, 12ம் வகுப்பு, ஐ.டி.ஐ, டிப்ளமோ, பட்டப்படிப்பு, செவிலியர் படிப்பு போன்ற கல்வித்தகுதி உடைய வேலைநாடுநர்கள் அனைவரும் கலந்து கொள்ளலாம். இம்முகாமில் பங்கேற்க விரும்பும் தனியார் நிறுவனங்கள் தங்களது பணிக்காலியிடங்கள் தொடர்பான விவரங்களை jobfairdeonagercoil@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். மாவட்ட நிர்வாகத்திடம் அனுமதி பெறப்பட்ட நிறுவனங்கள் மட்டுமே இந்த வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொள்ளமுடியும் எனவும், இவ்வேலைவாய்ப்பு முகாம் நடைபெறும் நாளன்று பதிவு செய்யாமல் வரும் வேலையளிக்கும் நிறுவனங்கள் இந்த முகாமில் கலந்து கொள்ள இயலாது என்ற விவரமும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இந்த மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொள்ள விருப்பமுள்ள நிறுவனங்கள் மற்றும் வேலைநாடுநர்கள் நாகர்கோவில் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மைய சமூகவலைதளமான டெலிகிராம் சேனல், எம்பிளாயிமென்ட் ஆபீஸ் நாகர்கோவில் என்ற குழுவில் தங்களை இணைத்து கொள்ளுமாறும் மற்றும் "தமிழ்நாடு தனியார்துறை வேலை இணையம் (www.tnprivatejobs.tn.gov.in) என்ற இணையதளத்தில் தங்களை பதிவு செய்து கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

எனவே, இச்சேவையை பொதுமக்களும், நிறுவனங்களும் பயன்படுத்தி இந்த மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொண்டு பயன் பெறுமாறு கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் மு. பிரதாப், தெரிவித்துள்ளார்.



### குமரியில் இருந்து கேரளாவுக்கு கடத்த முயன்ற

# 3 டன் அரிசி, 1800 லிட்டர் மண்ணெண்ணெய் பறிமுதல்

நாகர்கோவில், ஜூலை.10

கன்னியாகுமரி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து கேரளாவுக்கு ரேஷன் அரிசி மற்றும் மண்ணெண்ணெய் கடத்தப்படுவது தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதை தடுக்கும் வகையில் மாவட்ட பறக்கும் படை அதிகாரிகள் தீவிர ரோந்து பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் மாவட்ட பறக்கும் படை தனி வட்டாட்சியர் கெ எம் பாரதி தலைமையில், ஓட்டுனர் ஜாண் பிரைட் உள்ளிட்ட பறக்கும் படை குழுவினரால் . அகஸ்தீஸ்வரம் வட்டம் பகுதியில் பொது வினியோக திட்ட கடத்தல் தடுப்பு ரோந்து பணி நேற்று முன்திகம் நடைபெற்றது. அப்போது சந்தேகத்திற்கு இடமாக செம்பொன்கரை என்ற இடத்தில் வந்து கொண்டு இருந்த பயணிகள் ஆட்டோவை நிறுத்த சைகை காட்டினர். ஆனால் ஆட்டோ நிற்க்காமல் சென்றதால் துரத்தி பிடித்தனர். ஓட்டுனர் தப்பி ஓடி விட்டார். ஆட்டோவை சோதனை செய்த போது அதில் 554 கிலோ பொது வினியோக திட்ட அரிசி கண்டுபிடிக்கப்பட்டது. கைப்பற்ற பட்ட அரிசி கோணம் கிட்டங்கியில் ஒப்படைக்கப்பட்டது.

அன்று இரவு 11 மணியளவில் கிள்ளியூர் வட்டம் ரோந்து பணியில் இருந்த போது ஹெலன் நகர் என்ற இடத்தில் ஒரு மறைவான பகுதில் சுமார் 500 கிலோ ரேஷன் அரிசி மறைத்து வைத்தது கண்டுபிடிக்கப்பட்டது. நேற்று அதிகாலை 1.30 மணியளவில். கிள்ளியூர் வட்டம் இனயம் என்ற இடத்தில் ஒரு பஞ்சாயத்து கிணறு பக்கம் சுமார் 600 கிலோ ரேஷன் அரிசி கேரளா மாநிலத்திற்க்கு கடத்தி செல்ல இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

தொடர்ந்து விடியற் காலை சுமார் 4.30 மணியளவில் கிள்ளியூர், நடுத்துறை என்ற இடத்தில் பாழடைந்த வீட்டின் முன் புறத்தில் சுமார் 1500 கிலோ பொது வினியோக திட்ட அரிசி . மற்றும் மீனவர்களுக்கு மானியவிலையில் அரசால் வழங்கப்படும் வெள்ளை நிற மண்ணெண்ணெய் சுமார் 1700 லிட்டர் கேரளா மாநிலத்திர்க்கு கடத்தி செல்ல இருந்ததை கைப்பற்றப்பட்டது.

மேலும் காலை 5.30 மணியளவில் பொது வினியோக திட்ட ரேசன் மண்ணெண்ணெய் 140 லிட்டர் நடுத்துறை என்ற இடத்தில் புல் தரையில் மூடி போட்டது கண்டுபிடிக்கப்பட்டு கைப்பற்ற பட்டது .

இனயம் பகுதியில் நடந்த ரோந்து பணியில் இருந்த போது புதுக்கடை காவல் நிலைய சிறப்பு எஸ்ஐக்கள் ஜாண் சத்திய தாஸ் செல்வ ராஜ் . அரிசி பறிமுதல் செய்ய உதவி செய்தனர். நடுத்துறை என்ற இடத்தில் அரிசி மண்ணெண்ணெய் எடுக்கும் போது கருங்கல் காவல் நிலைய காவலர்கள்.உதவி செய்தனர்.

கைப்பற்ற பட்ட அரிசியை காப்புக்காடு அரசு கிட்டங்கியிலும், ஒப்படைக்கப்பட்டது. வெள்ளை நிற மண்ணெண்ணெய் தூத்தூர் மண்ணெண்ணெய் அரசு கிட்டங்கியிலும், நீல நிற ரேசன் மண்ணெண்ணெய் மார்த்தாண்டம் கிட்டங்கியிலும் ஒப்படைக்கப்பட்டது.

### ஆம்பூர் அருகே

# தேவலாபுரம் திருமால்புரத்தில் ஸ்ரீ கெங்கையம்மன் 34ஆம் ஆண்டு திருவிழா



திருப்பத்தூர்:ஜூலை:10

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் அடுத்த தேவலாபுரம் ஊராட்சிக்குட்பட்ட திருமால்புரம் பகுதியில் உள்ள ஸ்ரீ கெங்கையம்மன் கோயிலின் 34 ஆம் ஆண்டு திருவிழா பக்தி பரவசத்துடன் நடைபெற்றது. திருவிழாவையொட்டி அம்மனுக்கு பால், தயிர், மஞ்சள், சந்தனம் உள்ளிட்ட பல்வேறு சிறப்பு அபிஷேகங்கள் நடைபெற்றன. தொடர்ந்து அம்மனுக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு மகா தீபாராதனை நடைபெற்றது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.

இதனைத் தொடர்ந்து, பக்தர்கள் அம்மனுக்கு நேர்த்திக் கடனாககூழ்அமுதுபடைத்து, ஊர்வலமாக எடுத்து வந்து வழிபட்டனர். புதன்கிழமை மாலை பம்பை மேளம், தாரை, தப்பட்டை முழங்க பூங்கரக ஊர்வலம் தொடங்கியது. இந்த ஊர்வலம் திருமால்புரம் நகரின் முக்கிய வீதிகள் வழியாக வலம் வந்து, பக்தர்களின் பக்தி முழக்கத்துடன் சிறப்பாக நடைபெற்றது. திருவிழாவின் போது பக்தர்கள் தங்களது நேர்த்திக்கடனை நிறைவேற்றும் வகையில் ஆடுகள் மற்றும் கோழிகளை பலியிட்டு அம்மனை வழிபட்டனர்.அதன்தொடர்ந்து பொங்கல் வைத்தல் மாவிளக்கு படைத்தல் இரவு திருவிளக்கு பூஜை நடைபெற்றது

வேலூர் திருப்பத்தூர் ஆம்பூர் வாணியம்பாடி தேவலாபுரம், திருமால்புரம், வெங்கடாசமுத்திரம், வீராங்குப்பம் கரும்பூர் பள்ளித் தெரு உம்ராபாத் பேங்க் ஷாப், ஸ்டார் சிட்டி உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு ஸ்ரீ கெங்கையம்மனை தரிசித்து அருள்பெற்றனர்.

இவ்விழாவையொட்டி சிவாச்சாரியார் சிவஸ்ரீ முத்து அர்ச்சகர் ஸ்ரீ கெங்கையம்மனுக்கு சிறப்பு அலங்காரம் செய்து பூஜைகளை நடத்தினார். திருவிழாவிற்கான அனைத்துஏற்பாடுகளையும்விழாக்குழுவினர் பொதுமக்கள் மற்றும் இளைஞர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

### சேலம் மாவட்டத்தில்

# பணியிடங்களை நிரப்ப தகுதியான நபர்களிடருந்து விண்ணப்பங்கள் வரவேற்பு: கலெக்டர் தகவல்

சேலம், ஜூலை 10

சேலம் மாவட்டத்திற்கு உட்பட்ட நல வாழ்வு மையங்கள், நகர்ப்புற நல வாழ்வு மையங்கள், மற்றும் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவமனையில் உள்ள போதை மீட்பு மையம் ஆகிய இடங்களில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப தகுதியான நபர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கபடுகிறது. தேசிய நல குழுமத்தின் கீழ் தற்காலிக ஒப்பந்த அடிப்படையில் இந்த பணி நியமனம் நடைபெற உள்ளது. மருத்துவ அதிகாரி 2 பேர், மன நல சமூக பணியாளர் 1, துணை செவிலியர். 1, சுகாதார ஆய்வாளர்கள் 4 , துணை செவிலியர் 1, நர்ஸ் 4 பேர் , கணினி தரவு உள்ளீட்டாளர் 1 , மருத்துவமனை தொழிலாளிகள் 5 பேர், ஆகிய பணியிடங்கள் முற்றிலும் தற்காலிக ஒப்பந்த அடிப்படையில் நிரப்பப்பட உள்ளது.

இந்த பணிகளுக்கான கல்வி தகுதிகள் மருத்துவ அலுவலர் குறைந்தபட்சமாக இந்திய மருத்துவ கவுன்சிலால் அங்கீகரிக்கப்பட்ட இளங்கலை எம். பி. பி. எஸ். பட்டம் பெற்று தமிழ்நாடு மருத்துவ கவுன்சிலில் பதிவு செய்திருக்க வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் மருத்துவ சமூக பணி அல்லது மனநல சமூகப்பணி துறையில் எம்.ஏ அல்லது மாஸ்டர் ஆஃப் சோஷியல் ஒர்க்கர் பயின்று இருக்க வேண்டும். செவிலியர் பணிக்கு இந்திய நர்சிங் கவுன்சிலில் அங்கீக ரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் ஜிஎன்எம் அல்லது பி.எஸ்சி பட்டம் பெற்றிருக்க வேண்டும். அதேபோன்று சுகாதார ஆய்வாளர் பணிக்கு மேல்நிலை இரண்டாம் ஆண்டு தேர்வில் உயிரியல் அல்லது தாவரவியல் மற்றும் விலங்கியல் பாடத்தில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். பன்முக சுகாதாரப் பணியாளர் (ஆண்), சுகாதார ஆய்வாளர் பணிக்கு சுகாதார ஆய்வாளர் பயிற்சி அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனம் அல்லது பல்கலை க்கழகம் காந்திகிராம் ஊரக நிறுவனத்தில் பயிற்சி பெற்றிருக்க வேண்டும். ஏ என் எம் துணை செவிலியர் இரண்டு வருடம் (ஏ என் எம்) பயிற்சி பெற்றிருக்க வேண்டும். கணினி தரவு உள்ளீட்டாளர் ஏதேனும் பட்டப்படிப்பு ஒரு வருட (பிஜி டிப்ளமோ கம்ப்யூட்டர் அப்ளிகேஷன்) தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் இளநிலை தட்டச்சு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். மருத்துவமனை பணியாளர்கள் எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்று 40 வயதிற்குள் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும். விண்ணப்பதாரர்கள் https :www.salem.nic.in என்ற இணையதள முகவரியில் விண்ணப்பத்தினை பதிவிறக்கம் செய்து பூர்த்தி செய்த விண்ணப்பங்களை 20.07.2026 அன்று மாலை 5.00 மணிக்குள் மாவட்ட சுகாதார அலுவலர்/ நிர்வாக செயலாளர், சேலம் மாவட்ட நல சங்கம், பழைய நாட்டாண்மை கழக கட்டிட வளாகம் ,சேலம் 631001 என்ற முகவரிக்கு அனுப்பி பயன்பெறுமாறு சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் இளம் பகவத் தெரிவித்துள்ளார் .



# நாகர்கோவில் அண்ணா பஸ் நிலையத்தில் அரசு பஸ்சை இயக்கிய ஆசாமி கைது

நாகர்கோவில், ஜூலை. 10

நாகர்கோவில் அண்ணா பஸ் நிலையத்திலிருந்து மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்கு அரசு பஸ்கள் இயக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில் நேற்று காலை நாகர்கோவில் இருந்து பிலாவிளை என்ற பகுதிக்கு செல்லும் அரசு டவுன் பஸ் நிறுத்தப்பட்டிருந்தது. அப்போது பஸ்சுக்குள் ஏறிய ஒருவர் திடீரென டிரைவரின் இருக்கையில் அமர்ந்து கொண்டு பஸ்சை இக்கினார். இதனை பார்த்து அதிர்ச்சி அடைந்த டிரைவர் பஸ்சில் இருந்த அந்த நபரை கீழே இறங்குவதற்கு கூறினார். அந்த சமயம் வாலிபர் தான் வைத்திருந்த கற்களால் வீசிவிடுவேன் என மிரட்டினார்.

எனினும் சாதுர்யமாக செயல்பட்ட டிரைவர், கண்டக்டர் மற்றும் பொதுமக்கள் உதவியுடன் ஆசாமியை இருக்கையில் இருந்து எழுப்ப செய்தனர். ஆனால் அந்த நபர் பஸ்சுக்குள்ளேயே இருந்தார். இதையடுத்து டிரைவர் பஸ்சை கோட்டாறு காவல் நிலையத்திற்கு கொண்டு சென்றார். அங்கிருந்த போலீசார் பஸ்சில் இருந்த ஆசாமியை பஸ்ஸிலிருந்து இறக்கி, அவர் யார்? எதற்காக பஸ்சை இயக்க முயன்றார்? மனவலம் பாதித்தவரா? என விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் அண்ணா பஸ் நிலையத்தில் பரபரப்பை ஏற்படுத்தியது.

### மார்த்தாண்டத்தில்

# சிறுமி பாலியல் வன்கொடுமை; குற்றவாளிக்கு 25 வருடம் சிறை



நாகர்கோவில், ஜூலை.10

மார்த்தாண்டம் அருகேயுள்ள மருதங்கோடு கோடன்விளை வீடு பகுதியை சேர்ந்தவர் ஜான் சன் மகன் ஜெனிஸ் (30). இவர் கடந்த 2019 ஆம் ஆண்டு 16 வயது சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்த குற்றத்திற்காக மார்த்தாண்டம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு, விசாரணை செய்து குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு விசாரணை நாகர்கோவில் போக்சோ நீதிமன்றத்தில் நடந்து வந்தது இந்நிலையில் நீதிபதி இக்குற்றத்தில் ஈடுபட்ட குற்றவாளிக்கு 25 வருடம் சிறை தண்டனை மற்றும் 6,000 ரூபாய் அபராதம் விதித்து தீர்ப்பு அளித்தார்.

நீதிமன்ற வழக்கு விசாரணை மற்றும் சாட்சிகள் விசாரணை ஆகியவற்றில் சிறப்பாக செயல்பட்டு குற்றவாளிகளுக்கு தண்டனை வாங்கித் தர காரணமாக இருந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரிகள், அரசு வழக்கறிஞர், நீதிமன்ற காவலர் இந்த வழக்கின் நீதிமன்ற விசாரணையை முறையாக கண்காணித்த குளச்சல் உட்கோட்ட துணை காவல் கண்காணிப்பாளர், குளச்சல் அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் ஆகியோரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் வெகுவாக பாராட்டினார்.

### திருப்பத்தூர் மாவட்டத்தில்

# சுப்ரீம் கோர்ட்டு வழக்குகளுக்கான சிறப்பு மக்கள் நீதிமன்றம் அடுத்த மாதம் 3 நாட்கள் நடக்கிறது

திருப்பத்தூர்:ஜூலை:10

திருப்பத்தூர் மாவட்டத்தில் உச்சநீதிமன்ற வழக்குகளுக்கான சிறப்பு மக்கள் நீதிமன்றம் அடுத்த மாதம் 3 நாட்கள் நடக்கிறது.

சிறப்பு மக்கள் நீதிமன்றம் நீதியை மக்களின் இருப்பிடத்திற்கு கொண்டு போய் சேர்கும் தொலைநோக்கு பார்வைகளை முன்னெடுக்கும் வகையில் மத்தியஸ்தம் மூலம் தீர்வு காணுதல், தகராறுகளை இணக்கமாக தீர்ப்பதற்காக உச்சநீதிமன்றம் சமாதான் சாம்ரோஸ் (SAMADHAN SAMROJ என்ற சிறப்பு மக்கள் நீதிமன்றத்தை நடத்தி வருகிறது. இதன்படி திருப்பத்தூர் மாவட்டத்தில் உச்சநீதிமன்ற வழக்குகளுக்கான சிறப்பு மக்கள் நீதிமன்றம் அடுத்த மாதம் (ஆகஸ்டு) 21, 22, 23ந்தேதிகளில் நடக்கிறது. பாஸ்பர ஒப்புதல் அடிப்படையில் தீர்வு வழிமுறைகள் மூலம் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகளுக்கு இணக்கமான தீர்வு காண்பதையே சிறப்பு மக்கள் நீதிமன்றம் நோக்கமாக கொண்டுள்ளது. அனைத்து வக்கீல்கள், வழக்குதாரர்கள், வழக்கு தொடர்புடைய அனைத்து தரப்பினரும் இந்த முன்மொழிவின் கீழ் தகராறுகளை திறம்பட தீர்ப்பதில் தீவிரமாக பங்கேற்று பங்களிப்பை வழங்க வேண்டும்.

வழக்கு தாப்பினர் நோடியாகவோ அல்லது இணையதள காணொலி மூலமாகவோ ஆஜராகி தங்கள் பிரச்சினைகளை திருப்பத்தூர் சட்டப்பணிகள் ஆணைக்குழு, ஆம்பூர் மற்றும் வாணியம்பாடி ஆகிய நீதிமன்றங்களில் செயல்பட்டு வரும் சட்டப்பணிகள் குழு ஆகியவற்றில் சமரசமாக தீர்துக் கொள்ளலாம். சம்பந்தப்பட்ட தரப்பினர் மற்றும் அவர்களுடைய வக்கீல்கள் https//forms.gle/jqxefqF4BCWzukoP6, https://www.sci.gov.in கூகுள் படிவத்தை பூர்த்தி செய்து தங்கள் கோரிக்கைகளை வருகிற 27ந்தேதிக்குள் அனுப்ப வேண்டும்.

இது தொடர்பாக உதவி மற்றும் தகவலுக்கு திருப்பத்தூர் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவை தொடர்பு கொள்ளலாம்.

# கோபியில் தனியார் துறை வேலை வாய்ப்பு முகாம்: மாவட்ட ஆட்சியர் தகவல்

ஈரோடு ஜூலை 10

ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது ஈரோடு மாவட்ட நிர்வாகம் மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் இணைந்து நடத்தும் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் வருகிற 25ந்தேதி கோபிசெட்டிபாளையம் பழனியம்மாள் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெற உள்ளது.

இம்முகாமில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே ஏ செங்கோட்டையன் தலைமையேற்று பணிநியமன ஆணைகளை வழங்க உள்ளார். வேலைவாய்ப்பு முகாமில் 200க்கும் மேற்பட்ட தனியார்துறை வேலை அளிப்பவர்கள் கலந்துகொண்டு 10,000க்கும் மேற்பட்ட காலிப்பணியிடங்களுக்கு தங்கள் நிறுவனங்களுக்கு ஆட்களை தேர்வு செய்யவுள்ளனர். 8ஆம் வகுப்பு தேர்ச்சி முதல் 12ஆம் வகுப்பு தேர்ச்சி, பட்டதாரிகள், ஐடிஐ, டிப்ளமோ, பொறியியல் பட்டம் படித்தவர்கள், கணினி இயக்குபவர்கள், ஓட்டுநர்கள், செவிலியர், மருந்தாளுநர் பயிற்சி முடித்தவர்கள் என அனைத்து கல்வித்தகுதியினரும் கலந்து கொள்ளலாம். இம்முகாமில் கலந்து கொள்ள அனுமதி இலவசம். இம்முகாமில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தின் இலவச திறன் மேம்பாட்டு பயிற்சிகளுக்கான பதிவு, மாவட்ட தொழில் மையத்தின் தொழில் முனைவோர்களுக்கான ஆலோசனைகள், மாவட்ட முன் னோடி வங்கியின் வாயிலாக வங்கிக்கடன் குறித்த வழிகாட்டுதல்கள் ஆகியன மேற்கொள்ளப்பட உள்ளது.

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் மூலம் நடத்தப்படும் இவ்வேலைவாய்ப்பு முகாம், வேலைநாடுநர்கள் மற்றும் வேலைஅளிப்பவர்களுக்கு முற்றிலும் இலவசமாக செயல்படுத்தப்படுகிறது. எனவே, ஈரோடு மாவட்டத்தில் தனியார்துறையில் பணிபுரிய ஆர்வமாக உள்ள அனைவரும் இந்த வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொண்டு பயனடையுமாறும், தேர்ந்தெடுக்கப்பட்டு தனியார்துறையில் பணியமர்த்தம் செய்யப்படும் வேலைநாடுநர்களின் வேலைவாய்ப்பு அலுவலக பதிவு எண் இரத்து செய்யப்படமாட்டாது என்றும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. இம்முகாமில் கலந்துகொள்ள முன்பதிவு கட்டாயமானதாகும் இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தினர்களுடன் ஆலோசனைக் கூட்டம்



திருப்பூர்:ஜூலை10

ஆட்சித்தலைவர் மனிஷ் நாரணவரே தலைமையில் அலுவலக்கூட்டரங்கில் தனியார் பேருந்து கட்டணம் தொடர்பாக தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தினர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

தனியார் பேருந்துகளில் அதிக கட்டணம் வசூழிக்கப்படுவதாக வரப்பெற்ற புகாரின் அடிப்படையில் தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தினர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அரசு நிர்ணயித்துள்ள கட்டணத்திற்கு அதிகமாக வசூலிப்பதாக புகார் வராபெற்றால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும். பேருந்து படிக்கட்டில் ஆபத்தான முறையில் பயணிகளை ஏற்றி செல்வதை அனுமதிக்க வேண்டாம், பேருந்தில் அதிக ஒலி எழுப்பும் ஒலிப்பான்களை பயன்படுத்த வேண்டாம் உள்ளிட்ட வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றிட வேண்டும் என தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தினரிடம் மாவட்ட ஆட்சித்தலைவர்மனிஷ் நாரணவரே அறிவுறுத்தித்தினார்கள்.

இக்கூட்டத்தில், வட்டார போக்குவரத்து அலுவலர்கள் பாஸ்கரன், பழனியப்பன், மோட்டார் வாகன ஆய்வாளர்கள், தனியாளர் பேருந்து உரிமையாளர் சங்கத்தினர் மற்றும் துறை சார்ந்த கலந்து கொண்டார்கள்.


**அறிவிப்பு**

I, Siraju Munira Jabarullah, W/O JABARULLAH, பிறந்த தேதி: 20.06.1974 பிறந்த ஊர்: (Dharapuram) No: 5/4, Athar Mosque Street, Dharapuram 638656, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி Siraj Munira என்று அழைக்கபடுகிறேன்

SIRAJU MUNIRA JABARULLAH




திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் சார்பில், முதியோர்களுக்கு எதிரான கொடுஞ்செயல் எதிர்ப்பு தினத்தையொட்டி நடைபெற்ற கட்டுரைப் போட்டியில் முதல் மூன்று இடங்களை பிடித்து வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார் சான்றிதழ் மற்றும் கேடயம் வழங்கி கௌரவித்தார். உடன் மாவட்ட சமூக நல அலுவலர் சுமதி, பள்ளி ஆசிரியர்கள், உள்ளிட்ட தொடர்புடைய துறை அலுவலர்கள் உள்ளனர்.

**DHINA TAMIL DAILY** : Published and Printed By Rajasingh, Published from 16C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.